IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

OS. 90/2018

| | |
|---|---|
| Deposition of Witness | : PW 7 |
| Name | : சர்மிளா (வயது – 42) |
| Father's Name /W/o | : க/பெ சௌந்தர்ராஜ் |
| Religion | : இந்து |
| Calling | : – |
| Address | : சயனாபுரம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 05.02.2026.

## குறுக்கு விசாரணை

1. நான் நிரந்தரமாக சயனபுரம் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆம். இந்த வழக்கு யார் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும் சோகமுத்தம்மாள் ராமச்சந்திரன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். சோகமுத்தாள் எனக்கு என்ன உறவு முறை என்றால் உறவு முறை இல்லை. இந்த வழக்கில் சோகமுத்தம்மாள் சரஸ்வதி நகர் எல்லை அம்மன் கோயில் தெருவில் குடியிருந்து வருகிறார் என்று தெரிவித்துள்ளார் என்றால் தெரியாது ஐயப்பன் தாங்கலில் குடியிருந்து வருவது தான் எனக்கு தெரியும்.

2. தாவா சொத்து சர்வே எண்.755 என்றால் சரிதான். பத்திரத்தை பார்த்தேனா என்றால் ஆம். எந்த வருடம் எந்த ஆவணத்தை பார்த்தேன் என்றால் சோகமுத்தம்மாள் பெயரில் உள்ள 2018 ஆம் ஆண்டு பார்த்தேன். மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை. மேற்படி பத்திரத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் தற்போது குடியிருக்கும் இடத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 20 கி.மீ தூரம் இருக்கும்.

3. பிரதிவாதி ராமசந்திரன் வாதிக்கு என்ன உறவு முறை என்றால் அண்ணன்

மகன் ஆவார். வாதியின் கணவர் பொன்னுசாமியின் அண்ணன் மகன் என்றால் சரிதான். தாவா சொத்தை பொன்னுசாமி பிரதிவாதிக்கு விக்ரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தரா என்றால் ஆம். மேற்படி பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டேனா என்றால் இல்லை. எவ்வளவு தொகைக்கு விக்ரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நேரடியாக தெரியுமா என்றால் சரிதான். பொன்னுசாமி சொல்லிதான் எனக்கு தெரியும் என்று தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் எவ்வளவு தொகை போடப்பட்டுள்ளது எவ்வளவு முன்பணம் பெறப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. பொன்னுசாமி ராமசந்திரனிடம் பெற்ற முன்பணத்தை திரும்ப கொடுத்தார் என்று தெரிவித்துள்ளேன் என்றாலும் மேற்படி எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக ஏற்கனவே பொன்னுசாமி பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

5. மேற்படி வழக்கை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதால் தான் அவரின் மனைவி வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மின் அட்டை, குடிநீர் அட்டை அனைத்தும் பிரதிவாதிதான் செலுத்தி வருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை பொன்னுசாமிக்கு சுவாதீனம் ஒப்படைத்ததற்கு எந்த ஆவணம் இல்லை என்றால் தெரியாது. என் பிரமாண வாக்குமூலத்தில் பொன்னுசாமி பிரதிவாதியிடம் இருந்து ரூ.20000 பெற்றுக்கொண்டார் என்றாலும் அதனை 2 மாதங்களுக்குள் திரும்ப கொடுத்துவிட்டார் என்பதற்கு ஆவணம் உண்டா என்றால் இல்லை. தாவா சொத்தில் பிரதிவாதி தான் இன்றைய தேதி வரை குடியிருந்து வருகிறார் என்றாலும் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**